# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு ஜனவரி 29 ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.10மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1) கரூர் நகராட்சிக்கு சொந்தமான கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதி கட்டிடம் அமைக்கப்பட்டு பல வருடங்களாக நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி கஸ்தூரிபாய் தாய்சேய் நல விடுதியானது கரூர் நகரின் மையப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான தாய்மார்கள் கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதி மூலம் சிகிச்சை மேற்கொள்ள வருகின்றனர். மேலும் கஸ்தூரிபாய் தாய்சேய் நல விடுதியில் சித்தா தொடர்பான மருத்துவ சிகிச்சையும் வழங்கப்பட்டு வருவதாலும், நாள்தோறும் பொதுமக்கள் அதிகளவு பயனடைந்து வருகிறார்கள்.

மேற்படி கஸ்தூரிபாய் தாய்சேய் நல விடுதி கட்டிடத்தில் சில அத்தியாவசிய பணிகள் செய்து தருமாறு மருத்துவ அலுவலர், கஸ்தூரிபாய் தாய்சேய் நல விடுதி கரூர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதி கட்டிடத்தில் அத்தியாவசியப் பணிகளை செய்து தர வி.என்.சி., எலக்ட்ரோட்ஸ், எஸ்.வெள்ளாளப்பட்டி கரூர் அவர்களின் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு பங்களிப்பு நிதியிலிருந்து செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

ஆதலால் இந்நகராட்சிக்கு சொந்தமான கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதி கட்டிடத்தில் அத்தியாவசியப் பணிகளை வி.என்.சி., எலக்ட்ரோட்ஸ் கரூர் அவர்களின் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு பங்களிப்பு நிதி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2)மேற்படி பணிகளை நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(இ1/881/2021)

தீர்மான எண்.23 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சியில் 2018–2019ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் வார்டு எண்.35 ல் தமிழ்நகர் முதல் வெள்ளாளப்பட்டி வரை மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு அரசாணை எண்.82 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) 23.08.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளும் போது வடிகால் செல்லும் பாதை குறித்து அங்கு வசிக்கும் பொதுமக்களின் இருபிரிவினர்களுக்கிடையே ஏற்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்கொண்டு பணியை மேற்கொள்ள இயலாத நிலையில், மாற்றுப்பாதையில் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டது. அப்பகுதி மக்களும் வடிகால் அமைக்க எதிர்ப்பு தெரிவித்ததால் பணிகள் மேற்கொண்டு செய்ய இயலவில்லை.

மேலும், 20.01.2021 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைசசர் அவர்களால் இப்பணி நீண்ட நாட்களாக நிலுவையாக இருப்பதைச் சுட்டிக்காட்டப்பட்டு வார்டு எண்.35 தமிழ்நகர் முதல் வெள்ளாளப்பட்டி வரை வடிகால் அமைக்கும் பணிக்கு பதிலாக வடிகால் வசதி இல்லாத வார்டு எண்.47 அசோக்நகர் பிரதான சாலை, NGGO நகர் பிரதான சாலை மற்றும் அசோக் நகர் குறுக்குத் தெருக்களில் வடிகால் அமைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

வார்டு எண்.35ல் தமிழ்நகர் முதல் வெள்ளாளப்பட்டி வரை 1720 மீ நீளத்திற்கு வடிகால் கட்டுதல் மற்றும் 12 சிறுபாலங்கள் கட்டும் பணிக்கு ரூ.106.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் மற்றும் இத்திட்டப்பணி தொடர்ந்து நிலுவையில் உள்ளதால் விரைவில்

திட்டப்பணியை மேற்கொண்டு முடிப்பதற்கு ஏதுவாக வார்டு எண்.35ல் தமிழ்நகர் முதல் வெள்ளாளப்பட்டி வரை 1720 மீ நீளத்திற்கு வடிகால் கட்டுதல் மற்றும் 12 சிறுபாலங்கள் கட்டும் பணிக்கு பதிலாக வார்டு எண்.47ல் அசோக்நகர் பிரதான சாலை, NGGO நகர் பிரதான சாலை மற்றும் அசோக் நகர் குறுக்குத் சாலைகளில் 1600 மீ நீளத்திற்கு வடிகால் மற்றும் 16 சிறுபாலம் கட்டும் பணிகள் ரூ.106.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி பெறவும், மேலும் இப்பணிக்கு குறைந்த ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள M/S. Chinnammal Enterprises, Manapparai அவர்களின் ஒப்பந்த விலையில் (Agreement rate) பணியினை மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்கண்ட திட்டப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2. மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் ஏற்படும் காலதாமதம் மற்றும் நடப்பு ஆண்டு விலை விகிதத்தில் தயாரிக்கப்படும் மதிப்பீட்டுத் தொகை அதனால் ஏற்படும் கூடுதல் செலவினத் தொகையை தவிர்க்கும் பொருட்டு, இப்பணிக்கு ஏற்கனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள M/S. Chinnammal Enterprises, Manapparai அவர்களின் ஒப்பந்த விலையில் (Agreement rate) பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/9140/2018)

தீர்மான எண்.24 அனுமதிக்கப்பட்டது.

3)அரசாணை (நிலை) எண்.368, நிதித்துறை (SFC-MC) நாள்.02.10.2020ல் ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள மாநில உயர்மட்ட குழு நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9361/2020/பி4, நாள். 12.2020ல் கரூர் நகராட்சிக்கு அடிப்படை வசதிகள் திட்டம் 2020–2021ன் கீழ் கரூர் நகராட்சிக்குட்பட்ட இரட்டை வாய்க்கால் பகுதிகளில் காமராஜ் மார்க்கெட் முதல் வடக்கு பகுதி வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (வார்டு எண்.16 மற்றும் 23) 435 மீட்டர் நீளத்தில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்த சிறப்பு திட்டத்தில் மேற்கொள்ள மாநில உயர்மட்டக்குழுவிற்கு கருத்துரு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் செயல்முறை உத்தரவு கடித ந.க.எண்.452/கனிம வளம் /2020, நாள்.04.01.2021ல் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 15.02.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் அவர்களின் கடித எண்.தஅபோக/கும்ப/கட்டிடம்–கூட்/620/2021, நாள்.21.01.2021ல் தோரணக்கல்பட்டி கிராமம் புல எண்.263, 264 மற்றும் 265/1 மொத்த விஸ்தீரணம் ஹெக்டர் 5.02.60 ஏர்ஸ் நிலத்தில் கூடுதல் புறநகர் பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்கள் மூலம் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், கரூர் நகரில் உள்ள திருச்சி புறவழிச்சாலையிலிருந்து சுமார் 700 மீட்டர் தூரத்தில் உள்ளதால் அணுகுசாலை வசதி இல்லாமல் உள்ளதால் நகராட்சியின் மூலம் அணுகுசாலை அமைத்து தருமாறும் கோரப்பட்டுள்ளது.

எனவே, சிறப்பு திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.150.00இலட்சத்திற்கு மாற்றுப் பணியாக தோரணக்கல்பட்டி கிராமம் புல எண்.263, 264 மற்றும் 265/1–ல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் மூலம் கூடுதல் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ளதால் அதற்கான அடிப்படை வசதியினை மேற்கொள்ளும் பொருட்டு கூடுதல் புறநகர் பேருந்து நிலையத்திற்கு செல்லும் அணுகுசாலையில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் அதற்கான திட்ட பிரேரணையை மாநில உயர்மட்டக் குழுவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்கள் மூலம் பரிந்துரை செய்து அரசின் சிறப்பு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்வதற்கான கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 42 | கரூர் நகராட்சி, வார்டு எண்.42, தோரணக்கல்பட்டி பகுதியில் அமைக்கப்பட உள்ள கூடுதல் புறநகர் பேருந்து நிலையத்திற்கான அணுகுசாலையில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணி | 150.00 |
| | | மொத்தம் | ரூ.150.00 இலட்சம் |

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.25 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் நகராட்சிக்குட்பட்ட வாங்கப்பாளையம் நீரூந்து நிலையத்தில் மின் உதிரிபாகங்கள் பொருத்துதல் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80லட்சம்</u>

1. A Sun Power Engineer, Karur மதிப்பீட்டை விட 0.28% சதம் குறைவு
2. P.Nallusamy, Karur மதிப்பீட்டை விட 3.18% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 2499, நாள்.30.09.2020 ம் தேதி ரூ.1.80 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineer, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/5472/2020)

தீர்மான எண்.26 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ., பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்ததாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

இனாம்கரூர் பகுதியானது 1 முதல் 14 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 67,131 பேரும் 22,408 குடியிருப்புகள் கொண்டு 11.26 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கரூர் பகுதியானது 15 முதல் 32 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 70,980 பேரும் 17,412 குடியிருப்புகள் கொண்டு 6.03 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

சணப்பிரட்டி பகுதியானது 33 முதல் 36 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 22,447பேரும் 7,434 குடியிருப்புகள் கொண்டு 7.68 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

தாந்தோணி பகுதியானது 37 முதல் 48 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 53854 பேரும் 20,182 குடியிருப்புள் கொண்டு 29.29சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இனாம்கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகள் நாளுக்கு நாள் விரிவாக்கம் அடைந்து வரும் பகுதியாக உள்ளது. அவ்வாறு உருவாகியுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் வசதி இன்மையால் வீடுகளுக்கு அருகிலேயே நீர் உறிஞ்சும் குழிகள் அமைத்து கழிவுநீரை வெளியேற்றுவதால், அப்பகுதி பொதுமக்களுக்கு பொதுசுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இப்பகுதிகளில் சேகரமாகும் மழைநீரையும் வெளியேற்ற வழியில்லாமல் உள்ளது. எனவே, பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி விரிவாக்கம் அடைந்த பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் தோரணக்கல்பட்டி பகுதியில் அமையவுள்ள கூடுதல் பேருந்து நிலையத்திற்கு செல்லும் அணுகு சாலை, இருபுறமும் மழைநீர் வடிகால், சாலை மையத் தடுப்பான்கள் மற்றும் மின்விளக்கு வசதிகளும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1ல் கோதை நகர் மற்றும் கே.ஏ. நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 43.00 |
| 2 | வார்டு எண்.2ல் வேலுச்சாமிபுரம் குறுக்கு தெருக்கள், திருக்காம்புலியூர் மற்றும் வடிவேல் நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 44.00 |
| 3 | வார்டு எண்.3ல் வி.சி. நர்சிங் ஹோம் தெரு மற்றும் எல்.ஜி.பி., நகர் மேற்கு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 38.00 |
| 4 | வார்டு எண்.4ல் வையாபுரி நகர் 1, 2 மற்றும் 3வது குறுக்குத் தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 36.00 |
| 5 | வார்டு எண்.5ல் செங்குந்தபுரம் குறுக்கு தெருக்கள் மற்றும் காமராஜபுரம் மெயின் ரோடு பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 36.00 |
| 6 | வார்டு எண்.6ல் நேதாஜி நகர், காயத்ரி நகர், சங்கர் நகர், பெரிய குளத்துபாளையம் மற்றும் சின்ன குளத்துபாளையம் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 41.00 |
| 7 | வார்டு எண்.7ல் அரசி நகர், புதுகுளத்துபாளையம், வள்ளுவர் தெரு, பிட்டர் பழனியப்பா தெரு மற்றும் மொட்டையப்பா கவுண்டர் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 41.00 |
| 8 | வார்டு எண்.8ல் அண்ணா தெரு மற்றும் அங்கப்பன் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 30.00 |
| 9 | வார்டு எண்.9ல் கண்ணதாசன் தெரு, கே.எஸ்.பி., தெரு மற்றும் திருப்பூர் குமரன் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 41.00 |
| 10 | வார்டு எண்.10ல் அம்மன் நகர் குறுக்கு தெரு, ஜெ நகர், அறிவொளி நகர், ஜவஹர் நகர், காமராஜ் தெரு, நவீன் நகர் மற்றும் திருமலை நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 42.00 |
| 11 | வார்டு எண்.11ல் தீரன் சின்னமலை நகர், டி.எச்.ஓ., தெரு, குமரப்பா கவுண்டர் தெரு மற்றும் டி.எஸ்.பி., தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 49.00 |
| 12 | வார்டு எண்.11ல் பொன் செல்லப்பா தெரு, சுப்பு கார்டன், சோழன் நகர் மற்றும் சத்தியமூர்த்தி தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 13 | வார்டு எண்.12ல் அண்ணா சாலை, அம்மன் நகர், எஸ்.பி., காலனி, எம்.கே. நகர், கொங்கு நகர், பிள்ளையார் கோவில் தெரு மற்றும் சோளியம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 14 | வார்டு எண்.13ல் பெரியார் நகர், செங்குந்தர் நகர் குறுக்கு தெருக்கள், நேரு நகர் மற்றும் வ.ஊ.சி., தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 15 | வார்டு எண்.14ல் பழைய போஸ்ட் ஆபீஸ் தெருக்கள், மற்றும் என்.எஸ்.கேக, நகர் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 48.00 |
| 16 | வார்டு எண்.16ல் சர்ச் கார்னர் முதல் காமராஜ் மார்க்கெட் வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 45.00 |

| | | |
|---|---|---|
| 17 | வார்டு எண்.17ல் ராமகிருஷ்ணபுரம் நிர்மலா மருத்துவமனை சாலை மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 18 | வார்டு எண்.20ல் கரூர் பழைய பைபாஸ் ரோடு முதல் கே.ஜி. மருத்துவமனை வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 42.00 |
| 19 | வார்டு எண்.20ல் சின்ன ஆண்டான் கோவில் ரோடு சந்திப்பு முதல் இண்டேன் கேஸ் கம்பெனி வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 20 | வார்டு எண்.21ல் பிரம்ம தீர்த்தம் ரோடு பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 40.00 |
| 21 | வார்டு எண்.22ல் கோபாலபுரம் பாலாஜி மெஸ் முதல் ரஜினிகாந்த் மருத்துவமனை வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 22 | வார்டு எண்.23 மற்றும் 24ல் கருப்பாயி கோயில் இறக்கம் மற்றும் வ.உ.சி., தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 23 | வார்டு எண்.30ல் ஆதி மாரியம்மன் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 24 | வார்டு எண்.33ல் தொழில்பேட்டை மற்றும் சிலோன் காலனி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 25 | வார்டு எண்.36ல் இ.பி. காலனி ரோடு குறுக்கு தெருக்கள் மற்றும் முத்து நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 26 | வார்டு எண்.36ல் அன்பு நகர் மற்றும் ஜெ.ஜெ. கார்டன் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 27 | வார்டு எண்.36ல் ராம் சர்மா நகர் மற்றும் டி.என்.எச்.பி., காலனி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 40.00 |
| 28 | வார்டு எண்.39ல் கங்கா நகர், காவேரி நகர் மற்றும் மலர் கார்டன் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 29 | வார்டு எண்.41ல் கே.கே. நகர் முதல் இடுகாடு வரை (Burial ground) உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 30 | வார்டு எண்.44ல் ராயனூர் பொன் நகர் முதல் திண்டுக்கல் ரோடு வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 31 | வார்டு எண்.48ல் அரசு கலைக்கல்லூரி மற்றும் வெங்ககல்பட்டி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 46.00 |
| 32 | வார்டு எண்.44ல் பாரதிதாசன் நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 40.00 |
| 33 | வார்டு எண்.37ல் காந்திகிராமம் ராமலிங்க நகர் மெயின் ரோடு மற்றும் திண்ணப்பா நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 45.00 |
| 34 | வார்டு எண்.46ல் அம்மன் நகர் குறுக்கு தெருக்கள், செல்லாண்டிபாளையம் முதல் ராயனூர் ரோடு வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 35 | வார்டு எண்.47ல் காமராஜ் நகர், தென்றல் நகர், யசோதா நகர் மற்றும் முத்தலாடம்பட்டி குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 36 | வார்டு எண்.42ல் சாலைபுதூர் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 37 | வார்டு எண்.42ல் முத்துகவுண்டன்புதூர் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 49.00 |
| 38 | வார்டு எண்.39ல் தமிழ் நகர் மற்றும் சூர்யா நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 44.00 |
| 39 | வார்டு எண்.40ல் கே.கே.நகர், வசந்தம் நகர், பாரதி நகர் மற்றும் தீரன் நகர் 3வது தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 44.00 |

| | | |
|---|---|---|
| 40 | வார்டு எண்.41ல் நேரு நகர் 3வது தெரு மற்றும் பகவதியம்மன் நகர் 10வது தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 44.00 |
| 41 | வார்டு எண்.36 மற்றும் 42ல் வெங்ககல்பட்டி குறுக்கு சாலை, பவானி நகர், அன்பு நகர் மற்றும் மலர் கார்டன் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 45.00 |
| 42 | வார்டு எண்.4 மற்றும் 5ல் மகாத்மா காந்தி சாலை மெயின் ரோடு பகுதியில் சாலை மேம்பாட்டு பணி | 50.00 |
| 43 | வார்டு எண்.5 மற்றும் 6ல் செங்குந்தபுரம் 12வது தெரு, காமராஜபுரம் வடக்கு மற்றும் பெரிய குளத்துபாளையம் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் சாலை மேம்பாட்டு பணி | 34.00 |
| 44 | வார்டு எண்.12ல் வாங்கபாளையம் முதல் லட்சுமி நகர் வரையுள்ள பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 24.00 |
| 45 | வார்டு எண்.18ல் இரத்தினம் சாலை மெயின் பகுதியில் சாலை மேம்பாட்டு பணி | 18.00 |
| 46 | வார்டு எண்.21 மற்றும் 28ல் நரசிம்மபுரம் நடுத்தெரு மற்றும் பி பிளாட் ஆகிய பகுதிகளில் புதைவடிகால் குழாய் மற்றும் மனித ஆய்வுக் குழி அமைக்கும் பணி | 24.00 |
| 47 | வார்டு எண்.42ல் தோரணக்கல்பட்டி பகுதியில் அமையவுள்ள கூடுதல் பேருந்து நிலையத்திற்கு செல்லும் அணுகு சாலை, சாலை மையத் தடுப்பான்கள் மற்றும் மின்விளக்கு வசதிகள் அமைக்கும் பணி | 190.00 |
| 48 | வார்டு எண்.42ல் தோரணக்கல்பட்டி பகுதியில் அமையவுள்ள கூடுதல் பேருந்து நிலையத்திற்கு செல்லும் பகுதியில் இருபுறமும் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 197.00 |
| | **மொத்தம்** | **2400.00** |

எனவே, விரிவாக்கம் அடைந்து வரும் பகுதிகளில் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி மழைநீர் வடிகால் பணிகளும், குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகளும் சாலை வசதி மற்றும் புதைவடிகால் குழாய்கள் அமைத்தல் போன்ற அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் மற்றும் தோரணக்கல்பட்டி பகுதியில் அமையவுள்ள கூடுதல் பேருந்து நிலையத்திற்கு செல்லும் அணுகு சாலை, இருபுறமும் மழைநீர் வடிகால், சாலை மையத் தடுப்பான்கள் மற்றும் மின்விளக்கு வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ள Infrastructure and Amenities fund 2020-2021ன்கீழ் ரூ.2400.00லட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்து தரவும், நிர்வாக அனுமதி வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1243/2021)

தீர்மான எண்.27 அனுமதிக்கப்பட்டது.

6)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சியில் அமைந்துள்ள ஆசாத் பொது பூங்காவில் SUMP உடன் கூடிய குடிநீர் வசதி செய்தல் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சம்</u>

1. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.12% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 2.62% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/1194/2020, நாள்.22.12.2020ல் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது

2 மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/6772/2020)

தீர்மான எண்.28 அனுமதிக்கப்பட்டது.

7)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020 – 2021 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சியில் அமைந்துள்ள ஆசாத் பொது பூங்காவிற்கு மின்விளக்குகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் நிறுவுவதல் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.75லட்சம்</u>

1. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.24% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 3.12% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/1194/2020, நாள்.22.12.2020ல் ரூ.5.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/6772/2020)

தீர்மான எண்.29 அனுமதிக்கப்பட்டது.

8)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சியில் அமைந்துள்ள ஆசாத் பொது பூங்காவிற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.25லட்சம்</u>

1. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.16% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 2.84% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/1194/2020, நாள்.22.12.2020ல் ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/6772/2020)

தீர்மான எண்.30 அனுமதிக்கப்பட்டது.

9)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020 – 2021 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சி பசுபதிபாளையம் ஆதிதிராவிடர் காலனியில் சிறு சமுதாயக் கூடம் அமைத்தல் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.30லட்சம்</u>

1. Thiru.S.Jayaraman, Krishnarayapuram மதிப்பீட்டை விட 0.16% சதம் குறைவு

2. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 2.82% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/1194/2020, நாள்.02.12.2020ல் ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது

2 மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.S.Jayaraman, Krishnarayapuram ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/6772/2020)

தீர்மான எண்.31 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சி வாங்கல் சாலையில் உள்ள நவீன ஆடுவதை சாலை கட்டிடத்தின் மராமத்து பணிகள் செய்தல் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.8.25லட்சம்</u>

1. திரு.கே.ரமேஷ், கரூர் மதிப்பீட்டை விட 0.13% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 3.30% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2597, நாள்.31.12.2020ம் தேதி ரூ.8.25 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.ரமேஷ், கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/4927/2020)

தீர்மான எண்.32 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சி வார்டு எண் 9 ஜோதிடர் தெருவில் சிமெண்ட் சாலை பராமரிப்பு செய்யும் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.75லட்சம்</u>

1. திரு. P. நல்லுசாமி, கரூர் மதிப்பீட்டை விட 0.18% சதம் குறைவு
2. திரு.எம்.லோகநாதன், கரூர் மதிப்பீட்டை விட 2.86% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2453, நாள்.09.09.2020ம் தேதி ரூ.5.75 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.நல்லுசாமி, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/3635/2020)

தீர்மான எண்.33 அனுமதிக்கப்பட்டது.

12)கரூர் நகர எல்லைக்குட்பட்ட தாந்தோணி கிராமம் சர்வே எண்.610/2A ;ல 2196ச.மீ., பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்க மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.470/2020/க.மா., நாள்.14.09.2020ல் சாலை அமைப்பு வரைபடம் தயார் செய்து வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மனைப்பிரிவு உரிமையாளரால் தார் சாலை, வடிகால் வசதி, பாலங்கள் மற்றும் மின்விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் சாலையை

நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என நகராட்சி பொறியாளர் அவர்களின் 04.01.2021ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே, இம்மனைப் பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடத்தினை நகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/4786/2020)

தீர்மான எண்.34 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு 2020–2021ம் ஆண்டிற்கு தேவைப்படும் கிருமி நாசியான லைசால் 1500லிட்டர் சப்ளை செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.22 நாள்.20.01.2021ல் ரூ.3.80லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 29.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன்<br>60/101ஏ/பி, நெ.6 ஆர்.எஸ்.பில்டிங்<br>குளக்கரை தெரு<br>காமராஜ் நகர், நாமக்கல் | லிட்டர் ஒன்றுக்கு | ரூ.249.76/–<br>ஜி.எஸ்.டி. உட்பட |
| 2 | ஸ்ரீஅத்தனூார் அம்மன் டிரேடர்ஸ்<br>1/34, காளப்பநாயக்கன்பட்டி<br>சேந்தமங்கலம், நாமக்கல் | லிட்டர் ஒன்றுக்கு | ரூ.260.00/–<br>ஜி.எஸ்.டி. உட்பட |

அலுவலகக் குறிப்பு
மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/126/2021)

தீர்மான எண்.35 அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சி வார்டு எண்.14 புகளூர் சாலையில் மின்கம்பங்கள் மாற்றி அமைக்கும் பார்க்கும் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50லட்சம்</u>

1. A Sun Power Engineer, Karur மதிப்பீட்டை விட 0.22% சதம் குறைவு
2. P.Nallusamy, Karur மதிப்பீட்டை விட 3.01% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2384 , நாள். 31.08.2020ம் தேதி ரூ.2.50 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineer, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/3561/2020)

தீர்மான எண்.36 அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சி வார்டு எண்.33 முதல் 36 வரை உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின்விசை மோட்டார்கள் பழுது பார்க்கும் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சம்</u>**

1. M/S.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.14% சதம் குறைவு
2. திரு.எம்.லோகநாதன், கரூர் மதிப்பீட்டை விட 3.33% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2464, நாள்.23.09.2020ம் தேதி ரூ.5.00 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/4759/2020)

தீர்மான எண்.37 அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் நகராட்சி வார்டு எண்.15 முதல் 23 வரை உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின்விசை மோட்டார்கள் பழுது பார்க்கும் பணிக்கு முதன்முறையாக 19.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00லட்சம்</u>**

1. M/S.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.13% சதம் குறைவு
2. திரு.எம்.லோகநாதன், கரூர் மதிப்பீட்டை விட 3.30% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2469, நாள். 23.09.2020ம் தேதி ரூ.7.00 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/4340/2020)

தீர்மான எண்.38 அனுமதிக்கப்பட்டது.

17)கரூர் நகராட்சி வார்டு எண்.48ல் அருகம்பாளையத்தில் போதுமான மழை நீர் வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார் சாலையை மயானம் வரை நீட்டிப்பு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை 7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.7.50இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1078/2021)

தீர்மான எண்.39 அனுமதிக்கப்பட்டது.

18)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதிகளில் உள்ள டான்சி OHT க்கு அமராவதி ஆற்றில் இருந்து 140mm PVC pipe சேலம்–மதுரை பைபாஸ் சாலையில் பதிக்கப்பட்டு குடிநீர் ஏற்றம் செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது தேசிய நெடுஞ்சாலையின் இருபக்கமும் சாலை விரிவாக்கம் மற்றும் புதிய வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நடைபெறும் பொழுது 140mm PVC குழாய்கள் முற்றிலும் பழுதடைந்துள்ளதால் குடிநீர் ஏற்றம் செய்ய இயலாமல் உள்ளது. எனவே, குடிநீர் பணியின் அவசியம் கருதி 140mm PVC pipe குழாய்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00இலட்சம் அனுமதிக்கலாம். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/592/2021)

தீர்மான எண்.40 அனுமதிக்கப்பட்டது.

19)கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள பகுதிகளுக்கு குடிநீரல்லாத உபயோகத்திற்கு சிறு மின்விசைப் பம்பு மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின்விசைப் பம்புகள் அதிக இயக்கத்தின் காரணமாகவும் உயர் மின் அழுத்த வேறுபாடு காரணமாகவும், மோட்டார் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் புதிய மின்மோட்டார்களுக்கு தேவையான உதிரி பொருட்கள் பொருத்தவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,60,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,60,000/–யை இந்நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(இ3/1107/2021)

தீர்மான எண்.41 அனுமதிக்கப்பட்டது.

20)கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி பகுதிகளில் வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக சிறு மின்விசைப் பம்புகள் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆழ்துளை கிணறுகளிலுள்ள சிறு மின்விசைப் பம்புகளிலிருந்து அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்குதல், பேனல் போர்டு பழுதுகள், கேபிள்கள் மாற்றுதல், பழுதடையும் குழாய்கள் மற்றும் உதிரி பொருட்களை மாற்றுதல் போன்ற மராமத்து பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/1106/2021)

தீர்மான எண்.42 அனுமதிக்கப்பட்டது.

21)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதி வார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக சிறு மின்விசைப் பம்புகள் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆழ்துளை கிணறுகளிலுள்ள சிறு மின்விசைப் பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்குதல், பேனல் போர்டு பழுதுகள், கேபிள்கள் மாற்றுதல், பழுதடையும் குழாய்கள் மற்றும் உதிரி பொருட்களை மாற்றுதல் போன்ற மராமத்துப் பணிகளை மேற்கொள்ள நகராட்சிகளில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் இப்பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00இலட்சத்தை குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/1109/2021)

தீர்மான எண்.43 அனுமதிக்கப்பட்டது.

22)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதியில் வார்டு.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளிலுள்ள குடிநீரல்லாத உபயோகத்திற்கு ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள சிறு மின்விசை பம்புகள் அதிக இயக்கத்தின் காரணமாகவும் உயர் மின்னழுத்த வேறுபாடு காரணமாகவும் மின்மோட்டார் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளது. எனவே, புதிய மின்மோட்டார்கள் மற்றும் தேவையான உதிரி பாகங்கள் பொருத்தவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00இலட்சத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(இ3/1111/2021)

தீர்மான எண்.44 அனுமதிக்கப்பட்டது.

23)கரூர் நகராட்சிக்கு சொந்தமான 6வது வார்டு பகுதியில் பைபாஸ் சாலை மேல்புறம் உள்ள Blossom Apartment செல்லக் கூடிய சாலையில் புதிதாக இரண்டு எண்கள் மின்கம்பங்கள் அமைத்து தெருவிளக்குகள் அமைக்க புதிய மின் இணைப்பு வழங்குமாறு இவ்வலுவலக கடிதம் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியம் (இ/கா) அவர்களுக்கு விண்ணப்பக் கடிதம் அனுப்பியதற்கு மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.26,220/—யை மேற்கண்ட மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி புதிய தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு புதிய மின்இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.26,220/—யை மின்வாரியத்திற்கு செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
3)செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (இ3/2045/2020)

தீர்மான எண்.45 அனுமதிக்கப்பட்டது.

24)கரூர் நகராட்சியில் சணப்பிரட்டி மற்றும் தாந்தோணி பகுதிக்கு நகராட்சி பகுதிகளிலுள்ள குடிநீர் மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தாந்தோணி பகுதிகளிலுள்ள குடிநீர் பகிர்மானத் தொட்டிகளில் ஏற்படும் நீர் கசிவுகள், குழாய் பழுதுகள், வால்வு பழுதுகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளவும், கரூர் நகராட்சி வார்டு எண்.33 முதல் 48 வரையுள்ள பகுதிகளிலுள்ள பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் நீர்கசிவுகள், குழாய் பழுதுப்பணிகள், வால்வு பழுதுகள், போன்ற குடிநீர் குழாய் பழுதுகள் சரி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:
1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/1113/2021)

தீர்மான எண்.46 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதிகளில் வார்டு எண்.38 திருச்சி சாலை முதல் திண்ணப்பா நகர் சாலை எதிரில், வார்டு எண்.44 பொன்நகர் முதல் பேருந்து நிறுத்தம் அருகில் மற்றும் ரேசன் கடை எதிரில், வார்டு எண்.45 தாந்தோணி நகராட்சி அலுவலகம் எதிரில், வார்டு எண்.48 சுகூடீ அலுவலகம் எதிரில், வார்டு எண்.44 பாரதிதாசன் நகர் குறுக்கு சாலை மற்றும் வார்டு எண்.38 திண்ணப்பா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வரை குடிநீர் இணைப்பு பணிகள் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:
1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.10 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/1108/2021)

தீர்மான எண்.47 அனுமதிக்கப்பட்டது.

26) கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி மற்றும் தாந்தோணி பகுதிகளில் வார்டு எண்.33 முதல் 48 வரையுள்ள பகுதிகளுக்கு குடிநீர் கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சணப்பிரட்டி

மற்றும் தாந்தோணி பகுதியிலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வரையுள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகள் மற்றும் குடிநீர் வால்வுகள் பழுதுகள் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/1112/2021)

தீர்மான எண்.48 அனுமதிக்கப்பட்டது.

27)இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.அ3/281/2020 நாள்.25.01.2020ம் தேதிய கடிதத்தில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளர்கள் மற்றும் வருவாய் உதவியாளர்களுக்கான விரிவாக்கப் பயிற்சி 01.02.2021 முதல் 26.02.2021 வரை நடைபெற உள்ளதால் மேற்படி பயிற்சியில் இந்நகராட்சியிலிருந்து இரண்டு இளநிலை உதவியாளர்கள் கலந்து கொள்ளும் பொருட்டு உணவு மற்றும் மற்றும் தங்கும் வசதிகளுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் 20நாட்களுக்கு மொத்தம் ரூ.20,000/– ஆகும் மேற்படி இரண்டு நபர்களுக்கு ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். (சி1/6133/2020)

தீர்மான எண்.49 அனுமதிக்கப்பட்டது.

28)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதிகளில் வார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகம் அல்லாத தண்ணீர் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு HDPE டேங்க் அமைத்து அதன் மூலம் பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தாந்தோணி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசை பம்புகளுக்கான HDPE தொட்டிகள் மற்றும் அதற்கான கட்டைகள் 8 இடங்களில் உடைந்து பயன்படுத்த முடியாத நிலையுள்ளது. எனவே, பொதுமக்களுக்கு தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு பழுதடைந்து HDPE நீர் தொட்டிகள் மற்றும் கட்டைகளில் புதியதாக அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50லட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/1110/2021)

தீர்மான எண்.50 அனுமதிக்கப்பட்டது.

29)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.37ல் உள்ள பகுதிகளுக்கு காந்திகிராமம் பகுதியில் உள்ள இரண்டு குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு 25ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், கதவுகள் மரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவ்விடத்தை நேராய்வு செய்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பழுதடைந்த கதவுகளை அகற்றி புதிய கதவுகள் மாற்றி புதிய கதவுகள் பொருத்துதல், பூச்சுப் பணிகள் செய்தல், வர்ணம் பூசுதல் பணி, சிமெண்ட் சீராய் மூடி, சுற்று சுவர் அமைத்தல் போன்ற மராமத்து பணிகளை மேற்கொள்ள தெரிவித்ததின்பேரில் மேற்கண்ட மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00இலட்சத்தை குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/1105/2021)

தீர்மான எண்.51 அனுமதிக்கப்பட்டது.

30)கரூர் நகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோக பணிக்கான மின் தடையின்போது இயங்கி வரும் 400கேவிஏ., ஜெனரேட்டர் இயக்குவதற்கு பொருத்தியுள்ள மின்கலப் பெட்டி கடந்த 2017ம் ஆண்டு பொருத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட மின்கலப் பெட்டி திறன் குறைந்து உடனடியாக உள்ளூர் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடம் விலைப்புள்ளி பெற்று புதியதாக 2எண்ணிக்கை மின்கலப் பெட்டி பொருத்துவதற்கும், 10ஆம்ஸ் திறன் கொண்ட சார்ஜிங் யூனிட் பொருத்துவதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.85,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.85,000/—யை இந்நகராட்சியில் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ3/880/2021)

தீர்மான எண்.52 அனுமதிக்கப்பட்டது.

31)கரூர் நகராட்சி வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் Ring well 20HP மின்மோட்டார் 120HP மின்மோட்டார் இயக்கப்பட்டுள்ளது. தற்போது மின் ஏற்றத்தாழ்வு காரணமாக 20HP மின்மோட்டார் பழுது ஏற்பட்டு காயில் பழுதடைந்துள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பழுதடைந்த மின்மோட்டாரை பழுது சரிசெய்யத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00இலட்சத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/5637/2021)

தீர்மான எண்.53 அனுமதிக்கப்பட்டது.

32)கரூர் நகராட்சி வார்டு எண்.48ல் மாளமநாயக்கன்பட்டி பகுதியில் சிறு சமுதாய கூடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிட திறப்பு விழாவிற்கு வருகை புரிந்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இக்கட்டிடத்தில் கழிப்பிட வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்ய அறிவுறுத்தியதன் பேரில், இக்கட்டிடத்தில் சமுதாய கழிப்பிட வசதி, தண்ணீர் வசதி தரைத்தளத்தில் டைல்ஸ் பதித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை 0.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.0.80 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2020)

தீர்மான எண்.54 அனுமதிக்கப்பட்டது.

33)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.41 மற்றும் 42 உட்பட்ட பகுதிகளில் சாலைபுதூர், பண்டுதகாரன்புதூர், பழைய சுக்காலியூர் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. திருமாநிலையூர் ரவுண்டானா முதல் சேலம் – மதுரை பைபாஸ் ரவுண்டானா வரை சுமார் 4.00மீட்டர் நீளத்திற்கு சாலையில் இருபுறமும் நெடுஞ்சாலை துறை மூலம் சுமார் (4.00 கி.மீ + 4.00கி–மீ) = 8 கி.மீட்டர் தூரத்திற்கு வடிகால் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகராட்சி குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. தற்போது நகராட்சி குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட வார்டு எண்.41 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் 5''PVC பைப் 6mm மற்றும் 4'' மற்றும் 3'' PVC குழாய்கள் 1000mm பொருத்தவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.80 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/748/2021)

தீர்மான எண்.55 அனுமதிக்கப்பட்டது.

34)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019 – 2020 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சி வார்டு எண்.20 பசுபதி லே அவுட் பகுதியில் சுகாதார வளாகம் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 29.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00லட்சம்</u>

1. M/S.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.11% சதம் குறைவு
2. திரு.எம்.லோகநாதன், கரூர் மதிப்பீட்டை விட 3.53% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/2835/2019, நாள்.08.01.2021ல் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/7630/2020)

தீர்மான எண்.56 அனுமதிக்கப்பட்டது.

35)கரூர் நகராட்சிக்கு சொந்தமான முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தின் அனுமதிக் காலம் 18.07.2020 உடன் முடிவடைய உள்ளதால் வட்டாரப் போக்குவரத்து அலுவலர், கரூர் அவர்களின் 06.07.2020 கடிதத்தில் பேருந்து நிலைய அனுமதியை புதுப்பிக்க பேருந்து நிலையத்தின் தளம், பயணிகள் நிழற்குடை பொதுகழிப்பிடம், இலவச சிறுநீர் கழிப்பிடம் மற்றும் உட்காரும் இருக்கைகள், சுகாதார குடிநீர், வடிகால் பணிகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்கக் கோரியுள்ளார். எனவே, மேற்காணும் பணிக்கு ரூ.3.00இலட்சம் மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | M.Loganathan, Karur | 0.08% குறைவு |
| 2 | PRG Construction, Karur | 1.21% அதிகம் |
| 3 | RPS Construction, karur | 2.11% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M.Loganathan, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.2,90,022/–யை நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/723/2020)

தீர்மான எண்.57 பதிவு செய்யப்பட்டது.

36)தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு–303ன்கீழ் கரூர் நகராட்சியில் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கு உரிமையாணை கட்டணங்கள் நகர்மன்ற தீர்மானம் எண்.2588, நாள்.11.12.2020 மற்றும் நகர்மன்ற தீர்மானம் எண்.10 நாள்.20.01.2021 ஆகியவற்றின்படி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 245, 249, 250, 258, 262, 269 மற்றும் 270ன் கீழ்வரும் தொழில்களுக்கு 01.04.2021 முதல் 50சதவிகிதம் உயர்வு செய்யப்பட்டதை

கரூர் மாவட்ட சிறப்பு அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு அரசு களை அச்சகம், துவாக்குடி திருச்சி அவர்களின் ந.க.எண்.திட்டம் 04/142பி/2021 நாள்27.01.2021ன்படி A4 அளவு பக்கம் ஒன்றுக்கு ரூ.2100/– வீதம் 11பக்கத்திற்கு ரூ.23100/– (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) உரிய தலைப்பில் செலுத்திட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பிரசுரக் கட்டணம் உடனடியாக செலுத்த வேண்டி இருப்பதால் கட்டணத் தொகை ரூ.23100/–யை திரு.பூ.பழனிச்சாமி துப்புரவு ஆய்வாளர் அவர்களால் தொகை வழங்கப்பட்டு அரசு தலைப்பில் தொகை செலுத்தப்பட்டது. எனவே, மேற்படி கட்டணத் தொகையினை திரு.பூ.பழனிச்சாமி துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)கரூர் மாவட்ட சிறப்பு அரசிதழில் (EXTRAORDINARY DISTRICT GAZETTE) பிரசுரம் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.23100/–யை வருவாய் நிதியிலிருந்து செலவினம் செய்து கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம். (அ8/7685/2020)

தீர்மான எண்.58 அனுமதிக்கப்பட்டது.

37)கரூர் நகராட்சிக்குட்பட்ட கரூர் ரயில்வே லைன் மற்றும் சேலம் பைபாஸ் சாலையை இணைக்கும் 40அடி இணைப்பு சாலையில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.24.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.24.00 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.59 அனுமதிக்கப்பட்டது.

38)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி வார்டு எண்1,2,10,11,12,13, ஆகிய வார்டுகளின் விரிவாக்கம் அடைந்து வரும் பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் இல்லாமையால் குடிநீர் இணைப்பு வழங்க இயலாமல் உள்ளது. எனவே குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்காணும் பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் அமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை.ரூ.9.50லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.60 அனுமதிக்கப்பட்டது.

39)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதியில் உள்ள கே.வி.பி நீரேந்து நிலையத் தொட்டியில் மண் அதிகம் தேங்கியுள்ளதால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும்பொழுது தண்ணீர் கலங்களாகவே வருகின்றது. எனவே மேற்படி SUMP ல் உள்ள மண் துகள்களை அகற்றுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/– ஐ மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/–ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.61 அனுமதிக்கப்பட்டது.

40) கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 சாமிநாதபுரம் 3வது தெருவில் உள்ள புதை வடிகால் ஆய்வுக்குழி 17–18 ல் உள்ள 800mm RCC பைப் பழுது ஏற்பட்டு கழிவு நீர் தேங்கி அங்குள்ள பொது மக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி புதை வடிகால்

லைனை மாற்றி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.90லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.6.90 இலட்சத்தை நகராட்சி வடிகால் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.62 அனுமதிக்கப்பட்டது.

41)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2ல் உள்ள சமுதாயக்கூடத்தில் கூடுதல் பணிகள் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.63 அனுமதிக்கப்பட்டது.

42)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி வார்டு எண்.1 முதல் 10 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பகிர்மானகுழாய், புதைவடிகால் இணைப்பு வழங்கும் பணி மற்றும் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிகளின் பொழுது அங்குள்ள சாலைகள் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாலைகளை பராமரிப்பு செய்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.64 அனுமதிக்கப்பட்டது.

43) கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 அரிக்காரம்பாளையத்தில் உள்ள MCC வளாகத்தில் சிமெண்ட் தளம் அமைக்கவும் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைரூ.5.00லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.65 அனுமதிக்கப்பட்டது.

44)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதியில் உள்ள பழைய அலுவலக கட்டிடத்தை பராமரிப்பு செய்து குத்தகைக்கு விடுவதற்கு ஏதுவாக மேற்படி அலுவலக கட்டிடத்தை பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.66 அனுமதிக்கப்பட்டது.

45) கரூர் நகராட்சிக்குட்பட்ட 40 அடி இணைப்பு சாலையில் KFW பம்பிங் மெயின்லைன், கே.வி.பி நகர் சம்பிலிருந்து இராமாணுஜம் நகர், டான்சி டேங்க் மற்றும் இந்திரா நகருக்கு செல்லும் பம்பிங் மெயின் லைன் கே.வி.பி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து வார்டு எண்.5 காமராஜபுரம், செங்குந்தபுரம் செல்லும் மெயின் லைன் வடிகால் அமைக்கும் மையப்பகுதியிலும்,

சாலையின் இடையிலும் வருவதால் மேற்படி லைனை மாற்றி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.67 அனுமதிக்கப்பட்டது.

46)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23. வாங்கல் ரோடு அண்ணா வளைவு முதல் ஐந்து ரோடு சந்திப்பு வரை உள்ள சாலை பாதாள சாக்கடை மெயின் லைன் பழுது ஏற்பட்டு பள்ளங்கள் உண்டானதால் பாதாள சாக்கடை மெயின் லைன் சரி செய்யப்பட்டது. மேற்காணும் சாலை மிகவும் போக்குவரத்து மற்றும் பொது மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் சாலை என்பதால் மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு சாலையினை உடனடியாக சீர் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்கண்ட சாலையினை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.85லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.25இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.68 அனுமதிக்கப்பட்டது.

47)கரூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள சுற்றுசுவர் சேதமடைந்து விழும் நிலையில் உள்ளதால் புதிதாக சுற்றுசுவர் மற்றும் உள்ள பொது கழிப்பிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் அவர்கள் நேரிடைய அறிவுரையின்படி உடனடியாக சீரமைக்கும் பொருட்டு புதிதாக சுற்றுச்சுவர், சிமெண்ட் தளம் மற்றும் கூடுதல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00இலட்சத்தை நகராட்சி கல்வி நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.69 அனுமதிக்கப்பட்டது.

48)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 32 வரையுள்ள வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்தில் அனைத்து பகுதிகளில் உள்ள தெருக்களில் பாதாள சாக்கடை திட்ட வீட்டு கழிவறை இணைப்புகள் வழங்க 8000 எண்ணிக்கை வீடுகளுக்கு கழிவறைகள் அமைக்க பாதாள சாக்கடை ஆள் நுழைவு தொட்டிகள் இணைக்கும் வண்ணம் Internal Plumbing பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் கரூர் பகுதிகளில் உள்ள வார்டுகளில் பாதாள சாக்கடை மெயின் குழாய்கள் இல்லாததால் நிர்ணயிக்கப்ட்ட பாதாள சாக்கடை வீட்டு கழிவறை இணைப்புகள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே புதிதாக பாதாள சாக்கடை மெயின் குழாய்கள் அமைத்து புதிய வீட்டு கழிவறை இணைப்புகளை ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.25.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.70 அனுமதிக்கப்பட்டது.

49)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, வஞ்சுலீஸ்வரர் கோவில் சாலை மிகவும் சேதமடைந்துள்ளதால் பொது மக்கள் மற்றும் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். மேலும் வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் சாலை உள்ளதால் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் அவர்களின் நேரிடைய அறிவுரையின்படி உடனடியாக சீரமைக்கும் பொருட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.16.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.71 அனுமதிக்கப்பட்டது.

50)கரூர் நகராட்சிக்குட்பட்ட கரூர் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் நவீன பொது கழிப்பிடம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட நவீன பொது கழிப்பிடம் பணியில் கூடுதல் பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.50 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.72 அனுமதிக்கப்பட்டது.